# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : STC.176/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-5/PW- 4 <br> Name : பாக்யராஜ் <br> Father's/Husband's Name : சிமியோன் <br> Nationality : Indian | Village: <br> Age :40 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 19.06.2024**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் ,இருந்தார்**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது அம்மன்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன், கடந்த 2018 ம் ஆண்டு ஒருநாள் மாலை நேரத்தில் நான் எனது வீட்டிற்கு செல்வதற்காக நடந்த வந்தபோது அம்மன்குடி மாதாகோவில் தெரு அருகே கூட்டமாக இருந்தது நான் சென்று பார்த்தபோது அங்கு விபத்து ஏற்பட்டிருந்தது. அடிபட்டவர்களை ஆம்புலன்ஸில் ஏற்றி சென்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

31.01.2018 ம் தேதி மாலை 3 மணியளவில் நானும் அழகர்ஜான் என்பவரும் சம்பவ இடத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த சோழபுரம் போலிசார் குற்ற எண் 25/2018 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தனர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- N. Sivapalani,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**